3. கவன ஈர்ப்பு

(அ) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூரில் 'டைபாய்டு' காய்ச்சல் பரவியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ''வடஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் நகரில் 'டைபாய்டு' காய்ச்சல் பரவியுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,

மாண்புமிகு திரு, சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

சென்ற ஆண்டில் மழைக்காலம் துவங்கிய ஓரிரு மாதங்களிலேயே திருப்பத்தூர் நகரில் என்டிரிக் காய்ச்சல் பரவத் தொடங்கியது, நவம்பர் மாதத்தில் 7 நபர்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டனர். டிசம்பர். சனவரி. பிப்ரவரி ஆகிய மாதங்களில் இந்நோயின் நிகழ்வுகள் அதிகமாகவே காணப்பட்டன, இந்நகரில் பொது சுகாதாரம் சரிவர பேனப்படாததாலும். குப்பைக் கூளங்கள் அகற்றப்படாமலேயே அங்காங்கே குவிக்கப்பட்டிருந்ததாலும். கழிவுநீர்க் கால்வாயில் தூர் எடுக்கப்படாததாலும் அந்நகரில் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீரில் போதுமான அளவு பாசிகையூட்டுதல் செய்யப்படாததாலும். இந்நோய் இந்நகரில் பரவியது என சுகாதாரத்துறை இணை இயக்குநர் கண்டறிந்து. தகுந்த சுகாதார நடவடிக்கைகளை எடுத்து மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்யுமாறு திருப்பத்தூர் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டன, தகுந்த நேரத்தில் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் சுகாதார அதிகாரிகளால் எடுக்கப்பட்டதின் விளைவாக மார்ச் மாதத்தில் இந்நோயின் நிகழ்வுகள் குறையத் தொடங்கின, மார்ச் மாதத்தில் இதுவரையிலும் எட்டு நபர்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டதாக தகவல் வந்திருக்கிறது, இந்நோய் மேலும் பரவாவண்ணம் கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகள் அப்பகுதியில் எடுக்கப்பட்டு வருகின்றன,

1992 ஏப்ரல் 27] [திரு. சு. முத்துசாமி]

(1) பொது சுகாதார நலத்தை பேணிகாக்கும் பொருட்டு குப்பை கூளங்கள். மலம் போன்றவற்றை அவ்வப்பொழுது அகற்றி சுகாதார முறைப்படி அழித்துவிடுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன,

(2) பொது மக்களுக்குத் தேவையான அளவு பாசிலை பூட்டப்பட்ட (Chlorination) பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன,

(3) நோய் பாதிப்புக்கு இலக்காகும் பகுதி வாழ் மக்களுக்கு டைப்பாய்டு தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது,

(4) இப்பகுகளில் ஈ ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன,

(5) உணவு விடுதிகளில் உண்ணும் உணவுப் பொருட்கள் துப்புரவான முறையில் வழங்கப்பட்டிருக்கின்றனவா, எனபதை காண அவ்வப்போது உணவு விடுதிகள் பார்வையிடப்படுகின்றன,

இந்நோய் மேலும் பரவாவண்ணம். இந்நகர் தீவிர கண்காணிப்பில் உள்ளது,

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்பத் தூர் தொகுதியில். திருப்பத்தூர் நகரிலே கடந்த 6 மாத காலமாக டைபாய்டு ஜுரம் மக்களை வாட்டி வதைக்கிறது, ஒவ்வொரு குடும்பத்திலும் 3 அல்லது 4 பேர்களுககாவது டைபாய்டு ஜுரம் வருகிறது, நகர சுகாதாரத் துறையின் அஜாக்கிரதை தான் காரணம் என்று நான் கருதுகிறேன். மேலும் குடிநீர்த் தொட்டிகள் மற்றும் குடிநீர் இணைப்புக் குழாய்களை பல நாட்களாக சுத்தம் செய்யாமல் இருப்பதால் தான் இவ்வாறு ஏற்படுகிறது. குடிநீரில் தினமும் குளோரின் கலக்கவேண்டும். மேலும் நகரத்தில் உள்ள கால்வாய்களைச் சரியாக எடுப்பது இல்லை. கழிப்பறைகளை சரியாக சுத்தம் செய்வதில்லை. நகரத்தில் விழும் கழிவுப் பொருட்களை அதற்காக உள்ள இடத்திலே கொட்டாமல், திருப்பத்தூரில் உள்ள பெரிய ஏரியில் கொண்டு வந்து கொட்டி விடுகிறார்கள். இதனால் சுற்றிலும் குடியிருப்புகள் இருப்பதால் கழிவுப் பொருட்கள் மக்கி கொசு உற்பத்தியாகிறது. இதனால் டைபாய்டு காய்ச்சல் பரவ ஏதுவாகிறது. இந்த டைபாய்டு ஜுரம் நன்றாக ஆக வேண்டும் என்றால் 26 ரூபாய் விலை கொண்ட மாத்திரைகள் 10, 15 சாப்பிட வேண்டும். டைபாய்டு ஜுரம் ஒருவருக்கு வந்தால் 500 ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. திருப்பத்தூர் மருத்துவமனைக்கு வந்தால் இதை குணப்படுத்த போதிய வசதி இல்லை. எனவே இது குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து எங்கள் பகுதி மக்களை காப்பாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பகல் 12—00.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

[1992 ஏப்ரல் 27

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூட 10 நாட்களாக டைபாய்டு ஜுரத்தல் இருக்கிறேன். டைபாய்டு ஜுரத்திலேயே தான் பேசிக் கொண்டு வருகிறேன். இந்த டைபாய்டு ஜுரத்திலிருந்து திருப்பத்தூர் நகர மக்களைக் காப்பற்ற தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னேன். அதற்குண்டான ஏற்பாடுகள் அந்தப் பகுதியில் உள்ள மருத்துவமனையின் மூலமாக எடுக்கப்படும். அதேபோல் நகராட்சியோடு பேசப்பட்டிருக்கிறது. அங்கே சுத்தமாக வைத்துக் கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க வேண்டுமென்று சொல்லி அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இப்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருப்பதாகவும் எனக்கு தகவல் வந்திருக்கிறது. எனவே, நிச்சயமாக உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

(ஆ) பண்ருட்டி வட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் கண்டரக்கோட்டை முதல் மேல குமாரமங்கலம் வரையிலான தென் பெண்ணையாற்றின் வலது கரை உடைபட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. தாமோதரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பண்ருட்டி வட்டத்தில் 17-11-1991-ல் ஏற்பட்ட வெள்ளத்தால் கண்டரக்கோட்டை முதல் மேல குமாரமங்கலம் வரை உள்ள தென்பெண்ணையாற்றின் வலது கரை உடைப்பட்டிருப்பது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது.

விவர அறிக்கை.

கடந்த 17-11-1991 அன்று பெண்ணையாற்றில் வந்த பெரு வெள்ளத்தில் பண்ருட்டி வட்டம், கண்டரக்கோட்டை முதல் மேல குமாரமங்கலம் வரை வலது கரை தாழ்வாக இருந்த காரணத்தால் தண்ணீர் 2.20 கி.மீ. நீளத்துக்கு வழிந்து புலவனூர், மேல் குமாரமங்கலம், பட்டாம்பாளையம் முதலிய ஊர்களில் வெள்ள நீர் புகுந்தது. இதனைத் தடுக்க கும்பகோணம்-